மட்டத்திலும், அதற்குப் பிறகு தொழிலாளர் நல அமைச்சர் மட்டத்திலும், அதற்கும் பிறகு என்னுடைய மட்டத்திலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று, கேட்ட கோரிக்கைகளிலே பெரும் அளவிற்கு, வித்தியாசம் இல்லாமல் தரும் அளவில் சமரச முடிவை அரசு சொல்லியும், வேலைநிறுத்தத்தை நடத்தியே தீருவது, அரசுக்கு நெருக்கடியை உண்டாக்குவது என்று வன்முறையை நாட்டிலே உருவாக்கத் தீவிரவாத முறையில் முனைப்போடு இறங்கி அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்குத் தொழிலாளர்கள் பலியாக வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அதிலே பலியாகி விட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். சில பேர்கள், விஷயம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல் இருந்த காரணத்தால், அதற்கு ஆதரவு அளிக்கும் முறையில் ஈடுபட்டார்கள். உண்மை உருவத்தைத் தெரிந்து கொண்ட பிறகு, அதை விட்டு விட்டது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அளவில் வெகு மோசமான நிலைக்கு, தீவிரவாதிக்கு இடம் தரக்கூடாது. இதில் உறுப்பினர்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, சட்டம் ஒழுங்கு இவற்றைக் காப்பாற்றும் பிரச்சினை இது என்ற அளவில், அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று, தலைவர் அவர்களே, உங்கள் முன்னால் எடுத்து வைத்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த அவசர ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்த மூன்று தீர்மானங்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) அறிக்கை அளித்தல்

1968-69-ம் ஆண்டுக்கான சாட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேற்பட்ட தொகை குறித்த பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU R. PONNAPPA NADAR : Sir, I present the Report of the Committee on Public Accounts on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1968-69.

(4) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இன்றையதினம் மூன்று மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற வேண்டியிருக்கிறது. இருப்பது மூன்று மணி நேரம். பின்தங்கியோர் நலன் பற்றிய கோரிக்கை ஒன்று, அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ் இரண்டு, மூன்றாவது, சிறைச்சாலைகள் பற்றியது. இந்த மூன்றும் முக்கியமான மானியக் கோரிக்கைகள். பின் தங்கியோர் நலன் கோரிக்கையின் மீதான விவாதத்தில் 18 உறுப்பினர்கள் பங்குகொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆளுக்கு நான்கு நிமிடங்கள் என்றாலும் சரியாகப் போதாது போல் தோன்றுகிறது. எப்படி நேரத்தை ஒதுக்கீடு செய்வது என்பதை மாண்புமிகு அவையின் முன்னவரும், மற்ற கட்சித் தலைவர்களும் கலந்து பேசி வரம்பு செய்துகொடுத்தால், விவாதத்தை நடத்த வசதியாக இருக்கும். உறுப்பினர்களும் ஒத்துழைத்து, உரையை சுருக்கமாக முடித்துக் கொள்ள வேண்டும் அவையின் முன்னவர் தன் கருத்தைச் சொல்ல வேண்டும்.